## குருநாகல் மாநகர சபை

## குருநாகல் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய குருநாகல் மாநாகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி குருநாகல் மாநாகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கையிலுள்ள களஞ்சிய இருப்பு ரூபா 31,637,495 வை கணக்கு வைக்கும் போது மீளாய்வாண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் இருப்பு கணிப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ஆரம்ப மீதியில்

களஞ்சியப் பெறுவனவுகள் மற்றும் களஞ்சிய விநியோகங்கள் சீராக்கிய பின்னர் எழுந்த மீதிகள் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முன்னைய வருடங்களுக்குரிய சீராக்கங்களாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முறையே ரூபா 3,398,826 வரவாகவும் ரூபா 103,725,470 செலவாகவும் சீராக்கப்பட்டு முன்னைய வருடத்தில் காணப்பட்ட நிதிப் பெறுபேறான ரூபா 32,603,922 தொகையானது உரிய சீராக்கங்களின் காரணமாக ரூபா 132,930,566 ஆக திருத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடிவீட்டுக் கட்டணமாக ரூபா 1,530,781 தொகை காணப்பட்டதுடன் வாடிவீட்டு வாடகை அறவீடு சம்பந்தமான பிரச்சினைகளினால் உரிய பணம் தொடர்ந்து அறவிடமுடியாதிருந்த போதிலும் அது தொடர்பாக இறுதி நிதிக்கூற்றுக்களில் கணக்குக் குறிப்புக்களினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்கள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,135,154 ஆக இருந்ததுடன் துணைப்பதிவேடு/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,179,909 ஆக இருந்தது.

### 1.3.3 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்து விட்ட கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 65,036,228 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 யூன் 30 ஆந் திகதி வரையில் 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் ரூபா 67,464,341 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 55,573,017 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 47,934,097 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 03 வங்கிக் கணக்கிற்குரிய வைப்புச் செய்யப்பட்டிருந்தும் வசூலிக்கப்படாத ரூபா 750,512 பெறுமதியான 54 காசோலைகள் காணப்பட்டது.

(ஆ) 03 வங்கிக் கணக்கிற்குரியதாகக் காணப்படுகின்ற ரூபா 626,836 தொகையான 15 மதிப்பிழந்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கிற்குரிய இனங்காணப்படாத வரவு மீதி ரூபா 34,076 உம் இனங்காணப்படாத செலவு மீதி 380,368 உம் காணப்பட்டது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ள படியானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்டது | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறைகள் | 29,500 | 34,451 | 20,495 | 29,100 | 34,070 | 13,826 |
| (ii) | வாடகை | 43,949 | 48,768 | 2,404 | 44,602 | 45,174 | 5,278 |
| (iii) | அனுமதிப்பத்தரக் கட்டணங்கள் | 3,700 | 4,005 | 278 | 6,170 | 4,424 | 705 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 88,615 | 66,249 | 64,611 | 87,753 | 59,873 | 63,419 |
| | மொத்தம் | 165,764 | 153,473 | 87,788 | 167,625 | 143,541 | 83,228 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திலிருந்து 2010 திசெம்பர் 31 வரை ரூபா 1,698,309 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் இருந்து ரூபா 15,523,467 முத்திரைக் கட்டணம் பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.3.4 இறைச்சி மற்றும் மீன்கடை வாடகை

(I) மத்திய சந்தையின் 4 இறைச்சிக்கடைகள் மற்றும் தெலியாக் கொன்ன இறைச்சிக்கடையொன்றும் 2005 ஆம் ஆண்டிற்குரிய வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 1,021,736 நிலுவை வாடகையினை அறவிடுவதற்காக 2006 ஆம் ஆண்டில் வழக்குத் தொரப்பட்டு மீளாய்வாண்டு இறுதி வரையில் 37 வழங்குத் தவணைகள் கடந்திருந்திருந்தும் உரிய வழக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மத்திய சந்தையின் 2 இறைச்சிக்கடைகள் 2006 ஆம்

ஆண்டிற்குரியதாகக் காணப்பட்ட வாடகையாக வாடகையாளரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 303,928 இனை அறவீடு செய்வதற்காக வழக்குத் தொடர்தல் 2010 யூலை 08 வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது.

(II) மீளாய்வாண்டிற்குரிய நகர சபையின் 13 இறைச்சிக்கடை மற்றும் மீன் கடைகளுக்காக கேள்வி கோரல் அறிவித்தல்கள் வர்த்தமானியின் ஊடாகவோ செய்திப்பத்திரிகையின் ஊடாகவோ விளம்பரப்படுத்தப் பட்டிருக்காததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரம் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டிற்குரியதாக வாடகைக்கு விடப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 489,060 ஆன 4 சொத்துக்கள் மாத்திரமாகும்.

### 2.3.5 நீர்க்கட்டணம்

------------------------

I. சபை எல்லையினுள் நீர்ப்பாவனையாளர்களுக்கு நீர்வழங்கும் தெம்பான நீர்த்தளத்தில் 17 நீர்ப்பாவனையாளர்களுக்குரிய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 145,692 ஆன நிலுவை நீர்க்கட்டணமொன்று காணப்பட்டதுடன் 09 நீர்ப்பாவணையாளர்களுக்குரிய 2008 தொடக்கம் 2010 வரையான காலப் பகுதியினுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களின் நீர்வழங்கல் துண்டிக்கப்பட்டிருந்த போதும் அந் நீர் பவனையாளர்களுக்குரிய ரூபா 89,938 ஆன நிலுவை நீர்க்கட்டண மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் காணப்பட்டது.

II. நீர்க்கட்டணத்தின் கீழ் வருடாந்த பட்டியலிடலின் அடிப்படையில் 48% ஆன ரூபா 35,618,047 நிலுவை நீர்க்கட்டண மீதியொன்று காணப்பட்டது. வியாபார நிலையங்களின் கீழ் பட்டியல் இடப்பட்டிருந்த 75 நீர்ப்பாவனையாளர்களுக்குரிய ரூபா 3,460,126 ஆன நிலுவை மீதியொன்று மீளாய்வாண்டின் யூலை மாத இறுதி வரையிலும் காணப்பட்டதுடன், மேற்கூறப்பட்டதன் பிரகாரம் ரூபா 3 மில்லியன் மாத்திரமான நிலுவை அதிகரிப்பொன்று ஏற்படும் வரையில் நீர்ப்பாவனையாளர்களுக்கு நீர்வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.3.6 கடை வாடகை

---------------------------

ஒரே தடவையில் பணம் செலுத்தும் அடிப்படையில் (கீமணி) 2007 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த குருநாகல் பஸ் நிலையத்தின் 33 கடைகளுக்குரியதாக 3

இற்கும் 45 தவணைக்கும் இடையில் காணப்பட்ட ரூபா 284,015 ஆன ஒரே தடவையில் செலுத்தும் பண நிலுவை மீதியும், 3 – 45 தவணை இடைவெளியில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 371,895 ஆன வாடகை நிலுவை மீதியொன்றும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டது.

### 2.3.7 ஆதனவரி

மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடலின் அடிப்படையில் 46% ஆன ரூபா 20,495,420 நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டது.

### 2.3.8 சொத்துக்கள் வாடகைக்குவிடல்

ஆகக்குறைந்த கேள்வி ரூபா 1,662,480 தொகையான 09 சொத்துக்கள் மீளாய்வாண்டில் வாடகைக்கு விடமுடியாதிருந்தது. அவ்வாறே இச் சொத்துக்கள் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிலும் வாடகைக்கு விடப்படாதிருந்ததுடன் அச் சொத்துக்களின் ஆகக் குறைந்த வாடகைப் பெறுமதி ரூபா 3,899,280 ஆக இருந்தது. அவ்வாறே 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பிரிவுகளிலான பரீட்சிப்பின் போது சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வியாபார உரிமையினைப் பெறாது இறைச்சி மீன் விற்பனை செய்யும் 13 இடங்கள் அளவில் இனங்காணப்பட்டிருந்தது.

### 2.3.9 முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்

2006 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 2005(45) ஆம் இலக்க சபை ஒப்புதலின் பிரகாரம் சபை எல்லையினுள் அங்கீகரிக்கப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டிக்காக ரூபா 1,000 பதிவுக் கட்டணமும் மாதாந்தம் ரூபா 300 கட்டணமொன்றும் அறவீடு செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நாளாந்தக் கட்டணமாக ரூபா 20 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ‘‘மாதாந்தம் கட்டண அறவீடு ஒழுங்கற்றிருந்ததனால் அதற்குப் பதிலாக நாளாந்தம் காசு அறவிடப்படுவதாக’’ தலைவர் 2010 திசெம்பர் 09 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

## 2.4 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டினது முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| **மீண்டுவருஞ் செலவினம்** | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| ஆளணிக்கான வேதனம் | 156,636 | 138,215 | 18,421 | 157,036 | 130,442 | 26,594 |
| ஏனையவைகள் | 144,505 | 123,889 | 20,616 | 445,034 | 120,533 | 324,501 |
| உப மொத்தம் | 301,141 | 262,104 | 39,037 | 602,070 | 250,975 | 351,095 |
| மூலதனச் செலவு | 142,970 | 46,978 | 95,992 | 147,545 | 35,310 | 112,235 |
| முழு மொத்தம் | 444,111 | 309,082 | 135,029 | 749,615 | 286,285 | 463,330 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் கோப்பு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியின் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 09 | 09 |
| இரண்டாம் தரம் | 87 | 73 |
| ஆரம்ப தரம் | 347 | 312 |
| பிற (அமைய, தற்காலிக) | -- | 177 |

### 2.5.2 பதவி வெற்றிடம் காணப்படுகின்றமை

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரின் பிரகாரம் 2 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளும் 5 வருமானப் பரிசோதகர் பதவிகளும் காணப்பட்ட போதிலும் இதன் கீழ் இரண்டு நிரந்தர வருமானப் பரிசோதகர்கள் மாத்திரம் மீளாய்வாண்டில் காணப்பட்டதுடன், வெற்றிடத்திற்காக தற்காலிக அடிப்படையில் ஏனைய பிரிவுகளிலிருந்து மூன்று வருமானப் பரிசோதகர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தற்காலிக வருமானப் பரிசோதகர் பதவிக்கு ஈடுபடுத்தப்பட்ட மூன்று பேருக்காக உள்ளுராட்சி ஆணையாளரின் 1997 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 1997/9 ஆம் இலக்க சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறப்பட வேண்டிய சேவைப் பிணை வைப்பு பெறப்படாதிருந்ததுடன் அவர்களின் உண்மையான பதவிக்குரிய ரூபா 3,000 ஆன பிணைப் பணம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 98,158,979 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,692,286 ஆகும்.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 2,016,339 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்துக்கு மேலாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகள் ரூபா 869,876 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.6.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 303,530 தொகையான மின்சார களஞ்சிய இருப்பு மீதியொன்று காணப்பட்டது.

### 2.6.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரீட்சிப்பு / மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் உறுதிப்புடுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தகப் பெறுமதியின் மீது கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களது பெறுமதி ரூபா 146,665,585 ஆகும்.

### 2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

குருநாகல் மாநகர சபையினால் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நீரின் அலகை நீர்ப்பாவனையாளர்களின் கீழ் பட்டியலிடப்பட்ட நீரின் அலகையும் இணக்கஞ் செய்த போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீரின் அலகு பட்டியலிட்ட நீரின் அலகினை விட 900,000 அலகினால் அதாவது 40% மட்டிலான வேறுபாடொன்று வருடாந்தம் காணப்பட்டதுடன் இந் நீர் இருப்பு அலகின் கிரயத்துடன் இணக்கஞ் செய்தபோது கிட்டத்தட்ட ரூபா 14,283,000 ஆன பெறுமதியாக இருந்தது. “நீர்க்குழாய்கள் வெடித்திருந்தமை, பொது நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் சபையில் உபயோகிக்கப்பட்ட நீரின் அளவுகள் என்பன பட்டியலிடப்படாமையும் இப் பிணக்குகளுக்குரிய காரணமாக இருந்ததாக “ 2010 திசெம்பர் 02 மற்றும் 2011 ஏப்ரல் 26 ஆந் திகதிகளிலான விடய விளக்கங்களின் பிரகாரம் மாநகர ஆணையாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2009 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 589,890 ஆன இனங்காணப்படாத நீர்க்கட்டண மீதியொன்றும் காணப்பட்டது.

### 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

தெம்பான நீர்த்தளத்தின் கீழ் மாநகர சபை எல்லையில் 03 மாவத்தைகளின் நீர்ப்பாவனையாளர்கள் 789 பேரிடமிருந்து மாதாந்தம் 7,500 நீர் அலகுகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் தொடந்தும் அவ்வழங்கல்களை வழங்குவதற்காக தெம்பான நீர்த்தளத்தில் நீர் அதிகரிப்பிள் அளவு காணப்படாமையினால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீரிலிருந்து பாவனையாளர்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட காலப்பகுதி, அதற்காக உபயோகிக்கப்பட்ட நீர் அலகுகள் போன்றவற்றை வேறாக இனங்காண்பதற்கு மாநகர சபையினால் முடியாதிருந்தது.

## 2.9 கூட்டுப்பசளை பெரல் உற்பத்தி செயற்திட்டம்

(அ) சபையினால் அமுல்படுத்தப்பட்ட கூட்டுப்பசளை பெரல் உற்பத்திச் செயற்பாட்டிற்காக 2007 மற்றும் 2009 காலப்பகுதியினுள் 3 நிறுவனத்தின் கீழ் ரூபா 1,707,385 ஏற்பாடு சபைக்கு கிடைத்திருந்ததுடன் அவ் ஏற்பாடுகளின் அடிப்படையில் அந்தந்த மூலங்களின் கீழும் உற்பத்தி செய்யப்பட்ட / விநியோகிக்கப்பட்ட மற்றும் எஞ்சிய பெரல்களின் அளவுகள் என்னென்னை என வேறாக இனங்காணக்கூடிய வகையில் புத்தக ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. 2010 ஒக்தோபர் 6 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 151 பெரல்கள் காணப்பட்டதுடன் அப் பெரல்கள் எந் நிதிய மூலங்களின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டது என வேறாக இனங்காண முடியாதிருந்தது. இம் மூலகங்களில் 3 இன் கீழ் விநியோகிக்கப்பட்ட பெரல்களின் அளவு 923 ஆக இருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 1030 என இனங்காணப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இச் செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தியொன்றும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டின் போது இச் செயற்பாட்டிற்காக ரூபா 100,000 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் மற்றும் ரூபா 8,340 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெரல் அச்சுக்களும் 2009 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 151 பெரல்கள் விநியோகிக்கப்படாமல் மீதியாகக் காணப்பட்டது.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,200 கிரயமான கூட்டுப்பசளை பெரல்கள் 600 இற்கு 50% சலுகை அடிப்படையில் ரூபா 743,061 செலவு செய்யப்பட்டு 2009 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்ததுடன் இதில் 192 பெரல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 ஒக்தோபர் மாதம் 6 ஆந் திகதிய பிரிவுகளிலான பரீட்சிப்புக்களின் பிரகாரம் அவ்வாறு பெறப்பட்டிருந்த பெரல் தட்டுக்களில் 10 மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதவாறு அழிவடைந்திருந்தது. சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட பெரலொன்றின் சராசரி உற்பத்திக் கிரயம் ரூபா 1,500 அளவாக இருந்ததுடன் இச் செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்த பெரலொன்றின் கிரயம் ரூபா 2,200 ஆக இருந்தது. பெரல் தட்டுக்கள் உடைந்து காணப்பட்டமை மற்றும் அதற்காக உபயோகிக்கப்பட்ட கம்பிகள் $^{1}/_{8}$ கனஅங்குல கம்பியாக இனங்காணப்பட்டிருந்தமையினால் இவ் பெரல்கள் சபையினால் உற்பத்தி செய்த பெரல்களை விட குறைந்த தரத்தினையுடைய பெரல்களாகக் காணப்பட்டது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினுள் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிக்கட்டுப்பாடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்